**மொரவெவ பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 19 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதியும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மொரவெவ பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஊழியர் கடன் பதிவேட்டின் படி 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 639,453 தொகையான ஊழியர் கடன் மீதி ரூபா 326,493 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் ஊழியர் கடன் ரூபா 312,960 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருந்தபோதும், தீர்க்கப்படாத முற்பணமாக ரூபா 221,981 மறை மீதியொன்று 2012 ஆம் ஆண்டு முதல் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்குரிய நிலையான வைப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் எதுவும் காணப்படாதிருந்த போதும், ரூபா 195,838 மறை மீதியொன்று ஐந்தொகையில் 2012 ஆம் ஆண்டு முதல் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 2,491,400 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் ஆண்டின் வருமான செலவினக் கணக்கில் ரூபா 7,226,850 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 4,735,450 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைத்த ரூபா 6,390,000 தொகையான கெப் வண்டியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது JCB இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்க வேண்டிய ரூபா 93,400 கூட்டுத்தொகையான வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 தொங்கல் கணக்கு

2011 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 7,864,759 தொகையான தொங்கல் கணக்கின் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது ஐந்தொகையில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**1.3.3 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 49,991,963 பெறுமதியான கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) உள்ளூராட்சி, மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படவேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 10 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிலுவை வருமானம் தொடர்பான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,255,867 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,652,482 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| ஆதனவரி | 323 | 25 | - |
| வாடகை | 1,090 | 629 | 46 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 238 | 176 | - |
| ஏனைய வருமானம் | 4,830 | 4,430 | - |

**2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம்**

கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக நீதிமன்றத் தண்டப்பணமாகக் கிடைக்க வேண்டிய ரூபா 5,178,334 தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டிற்காக நடைபெற்ற பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சிபாரிசுகளின் பிரகாரம் 06 பொருள் வகைகளைப் பழுதுபார்ப்பதற்கும், 19 பொருள் வகைகளை அகற்றுவதற்கும், 33 பொருள் வகைகளை அழிவடையச் செய்வதற்கும் 2015 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) JCB இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து 60 மாதாந்த தவணைகளில் செலுத்தித் தீர்ப்பதற்கு 2013 மே மாதம் பெறப்பட்ட ரூபா 9,520,000 தொைகயான கடன் பணத்திற்காக 2015 யூலை 30 ஆந் திகதி வரையிலும் செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் வட்டியாகிய ரூபா 3,952,391 தொகையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விபத்தினால் மிக மோசமாக நட்ட இழப்பிற்குள்ளாகி அகற்றப்பட்டிருந்த கிழக்கு மாகாண பிரதம செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று ரூபா 1.7 மில்லியன் பணத்தைக் செலவிட்டு சபையினால் 2012 மே 21 ஆந் திகதி பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அதனை சபைக்கு கையேற்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 பெப்ரவரி 15 ஆந் திகதி ரூபா 237,100 தொகை WiFi இணையதள வசதிக்காக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக தொலைத்தொடர்பு இணைப்பு பெறப்பட்டிருக்கவில்லை. இது வரையிலும் ரவுட்டர் மூலம் இணையதள வசதிகள் பெறப்பட்டமையினால் இணையதள வசதிக்காக செலவிட்ட பணம் பயனற்ற செலவினமாக இருந்தது.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

**3.2.1 எதாபெந்திவெவ பிரதான வீதி நிர்மாணம்**

இந்த வீதியின் 2 கிலோ மீற்றர் கல் இட்டு தார்போட்டு நிர்மாணிப்பதற்காக ரூபா 18,046,600 (பெறுமதிசேர் வரி தவிர்த்து) பெறுமதியில் மூன்று மாத காலத்தில் நிர்மாணத்தைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் 2012 மே 31 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த வீதி நிர்மாணத்தின் செயல்முன்னேற்றம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படாமையின் காரணமாக 2012 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரையில் ரூபா 2,954,923 செலுத்தப்பட்டதன் பின்னர் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டு 2014 மார்ச் 13 ஆந் திகதி ரூபா 19,577,095 (பெறுமதிசேர் வரி தவிர்த்து) தொகையான ஒப்பந்தப் பெறுமதிக்கு 06 மாத காலத்தில் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் வேறொரு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கொள்வனவு நடைமுறைகளின் போது ஒப்பந்தக்காரர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மிகவும் தகுதியான ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்படாமையினால் ரூபா 4,485,418 மேலதிக கொடுப்பனவைச் செய்தும் குறித்த காலப்பகுதியில் நிர்மாணங்களைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) ஒப்பந்தக்காரர் நிர்மாணங்களை திருப்திகரமானதாக மேற்கொள்ளாத சந்தர்ப்பத்தின் போது செயலாற்றல் பிணை முறியின் காலம் முடிவடைவதற்கு முன்னர் செயலாற்றல் பிணைமுறி பணமாக்கப்படாமையினால் அதன் பெறுமதியான ரூபா 902,330 தொகையை சபை இழந்திருந்தது.

(இ) இந்த வீதியை நிர்மாணிக்கும் போது 1+250 முதல் 1+450 இற்கு இடையே பல இடங்களில் கொங்கிரீட் கலவை குறித்த நியமித்திற்கு இல்லாமையாலும் கொங்கிரீட் தடிப்பம் 6 அங்குலத்தை விட குறைவாகக் காணப்படுவதன் அடிப்படையிலும் அந்த இடத்திற்கு பயன்படுத்தப்பட்ட $30M^3$ கொங்கிரீட் அளவில் நீண்ட காலரீதியில் நிலைத்திருப்பது பிரச்சினைக்குரியதாக இருந்தமை 2015 ஆகஸ்ட் 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) 2007 இன் 13 ஆம் மற்றும் 18 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டங்களினால் திருத்தப்பட்ட 2005 இன் 03 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 19,265,499 தொகைக்குரிய நிர்மாணச் சான்றிதழ் நிதிய வரியான (CIGFL) ரூபா 48,164 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 பிரதேச சபைக்காக நூலகமொன்றை நிர்மாணித்தல்

தேசத்திற்கு மகுடம் (தெயட்ட கிருள) செயற்திட்டத்தின் மூலம் நூலகத்திற்காக இரண்டு மாடிக்கட்டிடத்தின் முதலாவது மாடியை நிர்மாணிப்பதற்காக ரூபா 7,048,316 (பெறுமதிசேர் வரி தவிர்த்து) பெறுமதியில் மூன்று மாத காலத்தில் நிர்மாணங்களைப் பூர்த்திசெய்யும் அடிப்படையில் 2013 சனவரி 22 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு மாடிக் கட்டிடத்தின் முதலாவது மாடியை நிர்மாணிப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் படி 21 கொங்கிரீட் தூண்களுக்காக ஒரு தூணுக்கு 16mm இருப்புக்கம்பி 04 மற்றும் 12mm இரும்புக் கம்பி 04 வீதம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், ஒரு தூணிற்கு 16mm கம்பிகள் 04 மற்றும் 12mm கம்பிகள் 02 கம்பிகள் வீதம் பயன்படுத்தப்பட்டு 21 கொங்கிரீட் தூண்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 77 இரும்புக் கம்பிகள் குறைவாக ஈடுபடுத்தப்பட்டமையினால் கட்டிடத்தின் நீண்டகால இருப்பு பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஆ) நூலகத்திற்காக பெயர்ப் பலகையொன்றைப் பொருத்துவதற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 18,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது பொருத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 01 | 01 | - |
| இரண்டாம் நிலை | 14 | 06 | 08 |
| மூன்றாம் நிலை | 16 | 14 | 02 |
| மொத்தம் | 31 | 21 | 10 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஏப்ரல் மாதம் முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற பிரதேச சபையின் செயலாளர் பதவிக்காக தகுதியான நபரொருவரை நியமிப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 ஆகஸ்ட் 11 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பதில் கடமை அடிப்படையில் செயலாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) நூலகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சாரதி மற்றும் வேலைப் பரீட்சகர் போன்ற பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்
(ஊ) மனித வள முகாமைத்துவம்